தினமணி

**நவீன தொழில்நுட்பத்தில் கரும்புச் சாகுபடி**

First Published : 05 Jan 2012 01:10:58 AM IST



ஆலங்குடி: வேளாண்மையில் அதிக விளைச்சலைப் பெறவும், லாபத்தை ஈட்டவும், புதிய தொழில்நுட்பம் அவசியமாகிறது. அதன்படி, கரும்பு சாகுபடியில், நடவில் தொடங்கி அறுவடை வரை பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் செ. நடராஜன் கூறியது:

கரும்பு சாகுபடியில் விதைக்கரும்பு, பார் அமைத்தல், களை நீக்குதல், மண் அணைத்தல், தண்ணீர் பாய்ச்சுதல் மற்றும் அறுவடை போன்றவற்றால் விவசாயிகளுக்கு அதிகம் செலவானது. லாபமும் பெருமளவில் குறைந்தது.

இந்நிலையில், கரும்பு சாகுபடியில் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதன்படி, சாகுபடி மேற்கொண்டால் லாபம் இரட்டிப்பாகிறது.

அதாவது, ஐந்தரை அடி இடைவெளியில் டிராக்டர் மூலம் பார் அமைக்க வேண்டும். பின்னர், லேசாக வாய்க்கால் போன்று அமைத்து, அதில் சொட்டு நீர் பாசனத்துக்கான குழாய்களை பதித்து, மண்ணை மூடிவிட வேண்டும்.

நடவு தினத்தன்று சொட்டு நீர் மூலம் லேசாக தண்ணீர் பாய்ச்சி, அந்த ஈரப்பதத்தில் ஒற்றை நாற்றை நடவு செய்ய வேண்டும். பின்னர், தேவைக்கு ஏற்ப தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

மண் அணைக்கவும், களை நீக்கவும் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். தண்ணீரில் கரையக்கூடிய வகையிலான உரத்தை கரைத்து, அதை சொட்டு நீர்ப் பாசனக் குழாய் மூலம் பயிருக்கு அளிக்க வேண்டும். இப்படி உரத்தைப் பயன்படுத்தினால் உரம் வீணாகாது. தொழிலாளர் பற்றாக்குறையினால் சில சமயங்களில் அறுவடையில் தேக்கம் ஏற்படும். இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது கரும்பு ஆலைகள் மூலம் இரண்டு விதமான அறுவடை இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை தோட்டத்தின் அளவைப் பொருத்து மாறுபடும். தற்போது ஈஐடி பாரி சர்க்கரை ஆலை மூலம் தமிழகத்தில் 5 ஆலைகளில் 12 இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது இயந்திரம் மூலம் கரும்பை அறுவடை செய்து, ஆலைக்கு கொண்டு செல்லும் வாகனத்தில் ஏற்ற டன்னுக்கு ரூ. 360 வசூலிக்கப்படுகிறது. இந்த இயந்திரம் நாளொன்றுக்கு 250 டன் அறுவடை செய்கிறது. அதன்படி, ஒரு நாளைக்கு 750 பேர் மேற்கொள்ளும் பணியை ஓர் இயந்திரம் செய்கிறது.

இவ்வாறு இயந்திரம் மூலம் அறுவடை செய்வதால் மறுமுறை வளரும் பயிர் சீராகவும், வீரியம் மிக்கதாகவும் வளர்கிறது. மேலும், தோகைகள் துண்டாக்கப்பட்டு தோட்டத்திலேயே கொட்டப்படுவதால் கூடுதலாக இயற்கை உரம் கிடைக்கிறது.

சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க ஏக்கருக்கு 6,000 ரூபாய் சர்க்கரை ஆலையிலிருந்தும், குறு விவசாயியாக இருந்தால் அரசு முழு மானியமும் அளிக்கிறது என்றார் அவர்.

மேலும் விவரங்களுக்கு 99766 19198 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். கரும்பு நாற்று தேவைக்கு 97865 06343 என்ற எண்ணில் முன்னோடி விவசாயியான வடகாடு தேவதாஸ்ஸையும் தொடர்பு கொள்ளலாம்.

**ஆட்டு எரு: சத்துமிக்க இயற்கை உரம்**

First Published : 05 Jan 2012 01:10:27 AM IST



திருவெறும்பூர்: பெருகி வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு செயற்கை உரங்கள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றால் ஏற்படும் பக்க விளைவுகள் மனித சமுதாயத்திற்கு பெரும் தீங்கை விளைவிக்கின்றன.

அன்றாடம் பயன்படுத்தப்படும் காய்கறிகள் முதல் கடுகு வரை ஒவ்வொன்றையும் விளைவிக்க பயன்படுத்தப்படும் யூரியா போன்ற செயற்கை ரசாயன உரங்கள் உடலுக்கு பெரும் தீங்கை விளைவிக்கக் கூடியவை.

அதேநேரத்தில், ரசாயன உரங்களின் விலையும் தற்போது வேகமாக உயர்ந்து வருகிறது. செயற்கை ரசாயன உரங்களால் நமக்கு ஏற்படும் ஆபத்துகளைப் போக்க இயற்கை நமக்கு தந்த வரப்பிரசாதம்தான் ஆட்டு எரு. ஆட்டு எருவில், மாட்டு எருவில் உள்ளதைப் போல 2 மடங்கு தழைச் சத்தும், சாம்பல் சத்தும் உள்ளன. ஓர் ஆடு, ஓராண்டுக்கு 500 முதல் 750 கிலோ வரை எருவைக் கொடுக்கிறது.

ஓர் ஏக்கர் நிலத்தை எல்லா சத்துகளையும் கொண்டு வளப்படுத்த 100 ஆடுகளை வளர்த்தால் போதுமானது. ஆட்டு எரு மண் வளத்தைப் பெருக்கி, பசுமைப் புரட்சிக்கு வித்திடுகிறது என்றால் மிகையாகாது.

ஆட்டு எருவை மண்ணில் இட்டால் கரிமப் பொருள்களின் அளவு அதிகரித்து ஈரப் பதத்தை சேமிக்கும் திறன் அதிகமாகிறது. ஆட்டு எருவில் உள்ள சத்துகளின் அளவு, ஆட்டு இனம் மற்றும் அவற்றுக்கு அளிக்கப்படும் தீவனத்தைப் பொருத்தே இருக்கும்.

ஆடுகளுக்கு புரதச்சத்து நிறைந்த தீவனங்களான குதிரை மசால், முயல் மசால், வேலி மசால், சுபா புல், தட்டைப் பயறு போன்ற தீவனங்களை அளித்தால், எருவில் தழைச்சத்தின் அளவு அதிகமாக இருப்பதோடு, நுண்ணூட்டச் சத்துகளும், தாது உப்புகளும் அதிகமாகக் காணப்படும். ஆட்டு எருவில் 60 முதல் 70 சதம் தண்ணீரும், 2 சதம் தழைச் சத்தும், 0.4 சதம் மணிச் சத்தும் 1.7 சதம் சாம்பல் சத்தும் உள்ளன. மேலும், பயிர் வளர்ச்சிக்குத் தேவையான போரான், மெக்னீசியம், கோபால்ட், தாமிரம், துத்தநாகம், மாலிப்டினம் சத்துகளும் அதிகளவில் காணப்படுகின்றன.

நம்முடைய அன்றாட விவசாயத்திற்கு அதிகளவில் ஆட்டு எரு தேவைப்படுமாயின் அவற்றை ஆழ்கூள முறையில் தயார் செய்யலாம்.

அதற்கு முதலில் ஆட்டுக் கொட்டகையின் தரைப் பகுதியில் நிலக்கடலைத் தோல், சிறிய துண்டுகளாக வெட்டிய வைக்கோல், இலைச் சருகுகள், மரத்தூள், தேங்காய் நார்க் கழிவு போன்றவற்றை அரை அடி உயரத்தில் ஓர் ஆட்டிற்கு 7 கிலோ என்ற அளவில் பரப்ப வேண்டும்.

இவ்வாறு பரப்பினால் ஆட்டுப் புழுக்கையானது இந்த ஆழ் கூளத்தில் படிந்துவிடும். சிறுநீர் ஆழ் கூளத்தால் உறிஞ்சப்பட்டு தழைச் சத்து வீணாகாமல் பாதுகாக்கப்படும். ஆழ் கூளத்தில் உள்ள ஈரத் தன்மையைப் பொருத்து 3-லிருந்து 4 மாதங்களுக்கு ஒரு முறை ஆழ் கூள் ஆட்டு எருவை விவசாயத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

ஆழ் கூள முறையைப் பொருத்தமட்டில் 10 ஆடுகளிலிருந்து ஓராண்டில் இரண்டரை டன் தரமான எரு கிடைக்கும். இதில் 50 கிலோ யூரியாவில் உள்ளதைப்போல, தழைச் சத்தும், 37 கிலோ சூப்பர் பாஸ்பேட்டில் உள்ள மணிச் சத்தும், 40 கிலோ பொட்டாஷில் உள்ள சாம்பல் சத்தும் கிடைக்கும்.

இவ்வாறு ஆழ் கூள முறையில் பெறப்படும் ஆட்டு எருவை வேளாண் பயிர் சாகுபடிக்கு பயன்படுத்தினால் களை எடுக்கும் செலவு குறையும். மேலும், நெல், தக்காளி, மிளகாய், கத்தரி மற்றும் அனைத்து விதமான வேளாண்மைப் பயிர்களுக்கும் இந்த எருவைப் பயன்படுத்தினால் அதிக லாபம் அடையலாம்.

எனவே, ஆட்டு எருவை முறையாகப் பயன்படுத்தி இயற்கை வழி வேளாண்மைக்கு வித்திட்டால் ரசாயன உரங்களால் ஏற்படும் தீமைகளைக் குறைக்க  முடியும்.

**வாழையில் வாடல்நோய்!**

First Published : 05 Jan 2012 01:09:35 AM IST



திருநெல்வேலி: திருநெல்வேலி மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள வாழைப் பயிரில் வாடல்நோய் காணப்படுகிறது. இந்த நோயின் அறிகுறிகளை வாழையின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தில் காணலாம்.

ஆரம்பத்தில் அடி இலையின் ஓரங்கள் மஞ்சளாக காணப்படும். நாளடைவில் இந்த மஞ்சள் நிறம் இலையின் மையப்பகுதி அல்லது நடுநரம்புக்குப் பரவி, கடைசியில் இலை முழுவதும் மஞ்சள் நிறமாக மாறுகிறது.பின்னர், இந்த மஞ்சள் நிறமானது அடி இலையிலிருந்து மேல் இலைகளுக்கும் பரவி வாழை மரத்திலுள்ள அனைத்து இலைகளும் மஞ்சள் நிறமாக மாறும்.பாதிக்கப்பட்ட மரத்தின் அடி இலைகள், இலைக்காம்பு பகுதிகள் ஒடிந்து தண்டைச் சுற்றி தொங்கும்.

தண்டின் நீளவாக்கில் அடியிலிருந்து வெடிப்புகள் காணப்படும். சில நேரங்களில் மரம் இறப்பதற்கு முன்னால் நிறைய பக்க கன்றுகள் தோன்றும்.பொதுவாக நோய் பாதிக்கப்பட்ட வாழை மரத்தில் தார்கள் வருவதில்லை.

அப்படியே தார் வந்தாலும் காய்கள் மிகவும் சிறுத்தும், குறைந்த எண்ணிக்கையிலும் காணப்படும். இக்காய்கள் ஒரே சீராக பழுப்பதில்லை, சதைப் பகுதியும் ருசி இல்லாமல் அமிலச் சுவையாக இருக்கும். அடிக் கிழங்கை குறுக்காக வெட்டிப் பார்த்தால் அதில் நீர் மற்றும் சத்துக்களை கடத்தக்கூடிய சாற்றுக் குழாய்த் தொகுப்பு, மஞ்சள் கறுப்பு போன்ற நிறங்களில் காணப்படும்.

நீண்டநாள்களுக்கு பிறகு இந்த நோய் பாதிக்கப்பட்ட மரம் அழுகி, வெட்டப்பட்ட தண்டுப் பகுதியிலிருந்து அழுகிய மீன் போன்ற துர்நாற்றம் வீசும்.

இந்த வாடல்நோய் பியூசேரியம் என்று அழைக்கப்படும் ஒருவித பூஞ்சாணமானது ஏற்படுத்துகிறது. இந்த பூஞ்சாணம் பலவித வித்துக்களை உற்பத்தி செய்து அவை மண்ணில் சுமார் 30 ஆண்டுகள் வாழக்கூடியது.

கட்டுப்படுத்தும் முறைகள்: வாழையைத் தொடர்ந்து சாகுபடி செய்யாமல், நெல், மரவள்ளி போன்ற பயிர்களை ஓரிரண்டு ஆண்டுகள் சாகுபடி செய்தபின் வாழை நடவு செய்யலாம்.

எங்கெல்லாம் இந்த நோயின் தாக்குதல் இருக்கிறதோ, அந்தநிலங்களில் மாற்று ரகங்களான பூவன், பொபஸ்டா, செவ்வாழை ஆகியவற்றை சாகுபடி செய்யலாம்.நோய் பாதிக்கப்பட்ட கிழங்கு அல்லது கன்றுகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடங்களுக்கு கொண்டு சென்று நடவு செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

வாடல்நோய் தாக்காத வாழைத் தோட்டங்களில் தார் வெட்டும் முன்பே சென்று பார்த்து கன்றுகளைத் தேர்வு செய்ய வேண்டும். கன்றுகளை வாழைத் தோட்டத்திலிருந்து எடுத்தபின் கன்றுகளின் கிழங்குகளின் மேல்தோல் மற்றும் வேர்களை நீக்கி பின் அக்கிழங்கை 0.2 சதவிகிதம் கார்பெண்டாசிம் (ஒரு லிட்டர் நீரில் 2 கிராம்) மற்றும் மோனோகுரோட்டாபாஸ் (ஒரு லிட்டர் நீரில் 14 மில்லி) மருந்துக் கலவையில் 30 நிமிடம் மூழ்க வைத்து பின் நிழலில் உலர வைத்து நடவு செய்ய வேண்டும்.

நடவு செய்த உடன் கிழங்கை சுற்றி 20 கிராம் டிரைகோடெர்மா விரிடி மற்றும் 20 கிராம் சூடோமோனாஸ் ப்ளூரெசென்ஸ் ஆகிய எதிர் உயிர்க் கொல்லிகளை அரை கிலோ மண்புழு உரத்துடன் கலந்து இட்டு நீர் பாய்ச்ச வேண்டும். இந்த முறையை கன்று நட்ட 2, 4 மற்றும் 6-வது மாதங்களில் மீண்டும் செய்ய வேண்டும்.

ஓரிரண்டு வாழைகளில் நோயின் அறிகுறி தென்பட்டதும் அனைத்து வாழை மரத்துக்கும் தலா 2 லிட்டர் மருந்து கலவை வீதம் மரத்தைச் சுற்றி ஊற்றி பியூசேரியம் வாடல் நோயைக் கட்டுப்படுத்தலாம் என பாப்பாக்குடி தோட்டக்கலை உதவி இயக்குநர் நா. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**பயிர்க் கடன்களை ரத்து செய்ய வேண்டும்: சுகுமாரன் நம்பியார் வேண்டுகோள்**

First Published : 05 Jan 2012 12:42:12 AM IST

சென்னை, ஜன. 4: புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பயிர்க் கடன்களை தமிழக அரசு முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் சுகுமாரன் நம்பியார் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் சென்னையில் புதன்கிழமை செய்தியார்களிடம் கூறியது:

புயல் பாதித்த பகுதிகளில் பா.ஜ.க.வின் மாநில துணைத் தலைவர் எச். ராஜா தலைமையில் 4 பேர் கொண்ட குழு சுற்றுப்பயணம் செய்து வருகின்றனர்.

தமிழக அரசு மேற்கொண்டுவரும் நிவாரணப் பணிகள் நம்பிக்கை அளிக்கும் வகையில் உள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பயிர்க் கடன்களை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரமும், தென்னை மரத்துக்கு ரூ. 3 ஆயிரமும், வாழைத் தோட்டங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 60 ஆயிரமும் நிவாரணத் தொகை வழங்க வேண்டும்.

நிவாரணத் தொகை வழங்குவது மட்டுமின்றி பாதிக்கப்பட்ட விவசாயத் துறை மேம்பட விவசாயிகளுக்கு உரிய உதவியை அரசு செய்ய வேண்டும்.

மேலும், புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்துக்கு, மத்திய அரசு கூடுதல் நிதி உதவி தர வலியுறுத்துவோம்.

முல்லைப் பெரியாறு விவகாரத்தில் மத்திய அரசு செயல்படாமல் மெüனம் சாதித்து வருகிறது. இந்த விவகாரத்தில் கேரளத்தில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக இருந்து வருகின்றன. சிலர் இரு மாநிலங்களுக்கு இடையே பகைமையை உருவாக்க முயன்று வருவதாக சுகுமாரன் நம்பியார் தெரிவித்தார்.

பேட்டியின்போது பா.ஜ.க. மாநிலப் பொதுச் செயலாளர் மோகன்ராஜுலு உடனிருந்தார்.

**உரவிலையை குறைக்க வேண்டும்: விவசாயிகள் சங்கம்**

First Published : 05 Jan 2012 12:38:49 AM IST

வேலூர், ஜன. 4: உர விலையைக் குறைத்து உரத் தட்டுப்பாட்டினை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேலூரில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் சங்க மாநில செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக விவசாயிகள் சங்க மாநில செயற்குழுக் கூட்டம் வேலூரில் புதன்கிழமை நடைபெற்றது. மாநிலத் தலைவர் எஸ்.ஏ. சின்னசாமி தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய பெரும்பாலான விவசாயிகள், ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் 100 நாள் வேலைத் திட்டத்தால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினர். மேலும், இத்திட்டத்தை விவசாயப் பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும் எனவும், விவசாயிகள் சுட்டிக்காட்டும் நாள்களில் மட்டுமே இதனை செயல்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**பயறு வகை பயிரிட ஏற்ற தை பட்டம் ஏக்கருக்கு 500 கிலோ பெற வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2012,00:46 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்:"தைப்பட்டத்தில் பயறு வகைகளை பயிரிடலாம்,' என, கோபி வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறு வகைப் பயிர்கள் புரதசத்து மிகுந்தவை. இவற்றை பயிரிடுவதால் காற்றிலுள்ள தழைச்சத்து கிரகிக்கப்பட்டு, மண் வளம் அதிகரிக்கிறது. தமிழகத்தில் ஆண்டுக்கு 1.8 லட்சம் டன் பயறு உற்பத்தியாகிறது. தேவை ஏழு லட்சம் டன். இந்திய அளவில் பயறு உற்பத்தி திறன் ஹெக்டேருக்கு 623 கிலோ. தமிழகத்தில் பயறு உற்பத்தி திறன் ஹெக்டேருக்கு 340 கிலோ. பயறு உற்பத்தியை அதிகரிப்பது மிக அவசியம்தரமான விதைகளை பயன்படுத்தாதது, போதிய நீர்ப்பாசனம் இல்லாதது, பயிர் எண்ணிக்கை பராமரிக்காதது, டி.ஏ.பி., கரைசல் தெளிக்காதது, பருவத்தில் பயிர் செய்யாதது ஆகியவையே, உற்பத்தி குறைவுக்கு முக்கிய காரணம்.பயிர் உற்பத்தியை பெருக்குவது குறித்து கோபி வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது:வம்பன்-3,4, கோ-5, டி.எம்.வி.-1 ஆகிய உளுந்து ரகம், வம்பன்-2, கோ-6, 7, கே.எம்.-2 ஆகிய பாசிப்பயறு விதைகளை பயன்படுத்த வேண்டும். தனிப்பயிர் ஏக்கருக்கு எட்டு கிலோ, ஊடுபயிர் ஏக்கருக்கு நான்கு கிலோ, நெல் தரிசில் ஏக்கருக்கு 10 கிலோ பயன்படுத்தலாம்.

ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் சூடோமோனாஸ் கலந்து விதைப்பதன் மூலம், விதை மூலம் பரவும் பூஞ்சாண நோய் மற்றும் பாக்டீரியா நோய் கட்டுப்படும். தழைச்சத்து உரமிடுவதால் 20 சதவீத மகசூல் அதிகரிக்கும்.பயறு வகை பயிர்களுக்கு இலை வழியாக டி.ஏ.பி., கரைசல் தெளிப்பது மிகுந்த பலனை தரும். பூக்கும் தருணத்திலும், 15 நாள் கழித்து இரண்டு முறை டி.ஏ.பி.,

கரைசலை காலை அல்லது மாலை நேரத்தில் இலைகளின் மீது நன்கு படும்படி கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். அசுவிணி, வெள்ளை ஈ போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளும், தண்டு ஈ மற்றும் காய்ப்புழுக்களும் அதிகம் தென்படும். சாறு உறிஞ்சும் பூச்சிகளை டைமிதேயோட் அல்லது மீதைல் டெமட்டான் மருந்து 200 மில்லி தெளித்தும், ஐந்து சத வேப்பங்கொட்டை சாறு தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.வேர் அழுகல் நோய், சாம்பல் நோய், இலைப்புள்ளி நோய், மஞ்சள் தேமல் நோய் ஆகிய நோய்களை, பல்வேறு தொழில் நுட்பங்களை பயன்படுத்தி கட்டுத்தினால், ஏக்கருக்கு, 500 கிலோ வரை மகசூல் எளிதில் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**சம்பங்கி சாகுபடியில் தினமும் ரூ. 500 வருவாய் முகாசிபுலவன்பாளையம் பஞ். தலைவி சாதனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2012,00:52 IST

கருத்தை பதிவு செய்ய

சென்னிமலை: ஒரு ஏக்கர் சம்பங்கி மலர் சாகுபடி செய்து, தினமும், 500 ரூபாய் வரை வருவாய் பார்க்கிறார் முகாசிபுலவன்பாளையம் பஞ்சாயத்து தலைவி ராதிகா.

சென்னிமலை யூனியன், முகாசிபுலவன்பாளையம் பஞ்சாயத்து தலைவராக இருப்பவர் ராதிகா; விவசாய குடும்பத்தை சேர்ந்தவர். உள்ளாட்சி தேர்தல் வரை தீவிர விவசாயியாகத்தான் இவரை, அனைவருக்கும் தெரியும். காய்கறி, மஞ்சள், வாழை, கரும்பு போன்ற பயிர்களை சாகுபடி செய்து வந்த இவர், எட்டு மாதங்களுக்கு முன், தோட்டக்கலை துறை அதிகாரிகளின் அறிவுறுத்தல் பேரில், ஒரு ஏக்கரில் சம்பங்கி மலர் சாகுபடி செய்தார். தற்போது, சம்பங்கி மலர்கள் பூத்துக்குலுங்கி மணம் வீசுகிறது.

தினமும் காலை 5 மணிக்கே சம்பங்கி மலர் அறுவடையை துவக்கி விடுகிறார். பத்து கிலோ வரை அறுவடையாகிறது. கிலோ 50 ரூபாய்க்கு, வெள்ளோடு பூவியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். பூ வியாபாரத்தில் தினமும், 500 ரூபாய் வரை வருமானம் பார்த்து வருகிறார் ராதிகா.

அவர் கூறியதாவது:மற்ற பயிர்களை விட, அதிக வருமானம் தரும் தோட்டப்பயிராக சம்பங்கி உள்ளது. தேர்தல் சமயத்தில் வயலை சரியாக பராமரிக்கவில்லை அதனால் பூ அறுவடை குறைந்துள்ளது. நன்றாக பாரமரிப்பு செய்திருந்தால், தினமும் 15 கிலோ வரை பூ கிடைக்கும். இன்னும் இரண்டு ஆண்டுகளில் விதை கிழக்கு எடுக்கலாம். அது, 15 ரூபாய் வரை விலை போகிறது. சம்பங்கி சாகுபடி செய்து கொஞ்சம் உழைத்தால் போதும்; நல்ல வருமானம் பார்க்க முடியும், என்றார்.சம்பங்கிக்கு மானியம்

சென்னிமலை தோட்டக்கலை உதவி இயக்குநர் ராமசுப்பிரமணியம் கூறியதாவது:வாசனை திரவியம், மாலை, பூச்செண்டு தயாரிக்க, சம்பங்கி மலர்கள் பெருமளவில் பயன்படுகிறது.

இப்பூக்கள் இரண்டு வாரம் வரை வாடாது. ஏற்றுமதிக்கு ஏற்ற மலர். மே முதல் ஆகஸ்ட் மாதம் வரை பயிர் செய்யலாம், அனைத்து வகையான நிலங்களிலும் வளரும்.

ஹெக்டேருக்கு இரண்டு லட்சம் ரூபாய் வரை சாகுபடி செலவாகும். முதல் ஆண்டில், 20 டன் மகசூலும், இரண்டாம் ஆண்டில், 25 டன் மகசூலும் கிடைக்கும். தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டத்தில், சம்பங்கி சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு, 45 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது, என்றார்.

**விவசாயப் பணி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2012,02:29 IST

கருத்தை பதிவு செய்ய

நிலக்கோட்டை : ஊரக வேலை உறுதி திட்டத்தால், விவசாயப் பணிகள் பாதிப்படைந்துள்ளன. ராமராஜபுரம், மட்டப்பாறை, விளாம்பட்டி பகுதிகளில் நெல் நடவு பணிகள் முடிந்துள்ளன. தற்போது களை எடுக்கும் பருவம் துவங்கி உள்ளது. ஊரக வேலை திட்ட பணிகள் நடைபெறுவதால், கூலி ஆட்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. ஊரக வேலை திட்டத்தில் பாதி வேலை செய்தாலே நிறைய சம்பளம் கிடைப்பதால், விவசாய பணிக்கு ஆர்வம் காட்டுவதில்லை. களை எடுப்பதற்கு ஆட்களை திரட்ட முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். இதனால் விவசாயப் பணிகள் முடங்கி உள்ளன. விவசாய பணிகள் நடக்கும் காலங்களில், ஊரக வேலை திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**களைகட்டிய செங்கரும்பு அறுவடை :புதுகை மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 05,2012,01:39 IST

கருத்தை பதிவு செய்ய

புதுக்கோட்டை: பொங்கல் பண்டிகையை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் செங்கரும்பு அறுவடை களைகட்டியுள்ளது. கட்டுப்படியான விலை கிடைப்பதால் கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல் பயிருக்கு அடுத்தபடியாக கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பொங்கல் பண்டிகை மற்றும் கோவில் விழாக்களில் பயன்படுத்தப்படும் செங்கரும்பு மற்றும் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பப்படும் சாதாரண வகை கரும்பு என, இருவகை கரும்புகள் சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றில் பெரும்பாலும் சர்க்கரை ஆலைகளுக்கான கரும்பு சாகுபடி செய்வதில் தான் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்திவருகின்றனர். இதன்காரணமாக செங்கரும்பு சாகுபடி படிப்படியாக குறைந்துவருகிறது.

புதுக்கோட்டை அடுத்த பெருஞ்சுனை, சிறுஞ்சுனை, மேட்டுப்பட்டி, மறவாப்பட்டி, மயிலாப்பட்டி, மாங்குடி, மண்ணவேலான்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் செங்கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு செங்கரும்பு அறுவடை செய்வது வழக்கம். பொங்கல் பண்டிகை மட்டுமின்றி கோவில் விழாக்களிலும் கரும்பு விற்பனைக்காக அதிகளவில் குவிப்பது வழக்கம். பொங்கல் பண்டிகைக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் மாவட்டத்தில் கரும்பு அறுவடை களைகட்டத் துவங்கியுள்ளது. கரும்பு கொள்முதல் செய்வதற்காக மாவட்டத்தின் உள்ளூர் பகுதிகள் மற்றும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமான வியாபாரிகள் கிராமப் பகுதிகளில் முகாமிட்டுள்ளனர். தரத்தை பொறுத்து, 10 கரும்புகள் கொண்ட ஒருகட்டுக்கு, 60 முதல் 100 ரூபாய் வரை விலைபோகிறது. கடந்த ஆண்டை விட, 40 சதவீதம் வரை விலை அதிகரித்துள்ளதால் செங்கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். புதுகை மாவட்டம் பெருஞ்சுனை கிராமத்தைச் சேர்ந்த கரும்பு விவசாயி சந்திரன் கூறியதாவது: செங்கரும்பு பெரும்பாலும் பொங்கல் பண்டிகையை குறிவைத்தே சாகுபடி செய்யப்படுகிறது. சீரான விலை கிடைக்காததால் கரும்பு சாகுபடி செய்வதை விவசாயிகள் பெரும்பாலும் தவிர்த்து வருகின்றனர். பொங்கல் பண்டிகைக்கான மங்கல பொருட்களில் செங்கரும்பும் ஒன்று என்பதால் பெருஞ்சுனை உள்ளிட்ட சில கிராமங்களில் மட்டுமே இவை சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது இந்த கரும்புகள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. பராமரிப்பை பொறுத்து ஓர் ஏக்கரில், 8,000 முதல், 10 ஆயிரம் கரும்புகள் வரை வெட்டப்படுகிறது. இந்த ஆண்டு கரும்புக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தரமான, 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு, 80 முதல், 100 ரூபாய்க்கு விற்பனையாகிறது. நடுத்தர கரும்பு, 60, கட்டைக்கரும்பு, 40 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனையாகிறது. வெட்டுக் கூலி விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது என்றாலும் கடந்த ஆண்டை விட, 40 சதவீதம் வரை அதிக விலை கிடைப்பதால் என்னைப்போன்ற செங்கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**மனைகளாக மாறும் விளை நிலங்கள் அபாயம் : திருப்புவனத்தில் அழிகிறது விவசாயம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2012,22:58 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்புவனம் : நன் செய் விளை நிலங்கள், விவசாயத்தில் நஞ்சை ஏற்படுத்தும் "விலை நிலமாக' மாறி வருகிறது. தென்னந்தோப்பு,வாழைமரங்கள் அடியோடு வெட்டிசாய்க்கப்படுவதால் "மரக்கொலைகள்' அதிகரித்துள்ளது. விளை நிலங்கள் வீட்டுமனையாவதை தடுத்திடவும், விவசாயத்தை காத்திடவும் புதிதாக பொறுப்பேற்ற அ.தி.மு.க., அரசு நன்செய் நிலங்களை "பிளாட்' போட தடைவிதித்துள்ளது. தரிசு நிலங்களை, மாற்றுபயிர், தானியங்கள் விளையும்

நிலங்களாக மாற்றுவதிலும் அரசு அக்கறை எடுத்து வருகிறது.

ஆனால் அரசின் திட்டத்திற்கு எதிராக அதிகாரிகளின் செயல்பாடு உள்ளது. மதுரை- ராமேஸ்வரம் ரோடு, திருப்புவனம் பூவந்தி-தொண்டி ரோட்டில் தென்னந்தோப்பு, நன்செய் விளை நிலங்கள் "விலை நிலமாக' மாறி வருகிறது.

தடுக்கவேண்டிய அதிகாரிகள் "புரோக்கராக' உள்ளதால் அரசின் கவனத்திற்கு செல்ல வேண்டிய தகவல்கள் மறைக்கப்படுகின்றன. நெல் நடும் விளை நிலங்கள், கல் நடும் விலை நிலமாக மாறி விட்டது. விவசாயம் குறைவதால் எதிர்வரும் காலங்களில் உணவு, காய்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

---

தினகரன்

**பனியால் விளைச்சல் குறைவு முருங்கைக்காய் கிலோ ரூ.150**

பதிவு செய்த நாள் : 1/5/2012 1:16:00 AM



ஆலங்குளம் : பனிப் பொழிவால் வரத்து குறைந்ததால் முருங்கைக்காய் விலை கிலோ ரூ.150 வரை உயர்ந்துள்ளது. நெல்லை மாவட்டம் ஆலங்குளம் மற்றும் சுற்று வட்டாரத்தில் விளையும் காய்கறிகள் ஆலங்குளம் தையல்நாயகி மார்க்கெட் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து கேரளா மற்றும் தமிழகத்தின் வட மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது.

10 நாட்களுக்கு முன் கிலோ ரூ.40ல் இருந்து ரூ.60 வரை விற்பனையான முருங்கைக்காய், நேற்று

கிலோ ரூ.150 வரை உயர்ந்தது.

பனிப்பொழிவால் வரத்து குறைந்ததால் விலை உயர்ந்துள்ளது. கத்தரி, தக்காளி, உருளை கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரையும், கேரட், பீன்ஸ், மிளகாய் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையும், அவரைக்காய், பீட்ரூட், பல்லாரி கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையும், மாங்காய் கிலோ ரூ.50 வரையும் சில்லறைக்கு விற்கப்படுகின்றன. சுரைக்காய் 50 பைசா: கடந்த வாரம் கிலோ ரூ.7 முதல் ரூ.12 வரை விற்பனையான சுரைக்காய் தற்போது கிலோ 50 பைசாவாக வீழ்ச்சி அடைந்தது. உள்ளூர் உற்பத்தி அதிகரித்ததால் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.